# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 18.11.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த ஜுமுஆ குத்பாவில் நான் ஹதீஸின் ஒரு அறிவிப்பை எடுத்துரைத்தேன். அதாவது அஹழ் போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் அவர்களது சஹாபாக்கள், எதிரிகளின் தொடர் தாக்குதல்களின் காரணமாக ஐவேளை தொழுகைகளையும் சேர்த்து தொழ வேண்டியது ஏற்பட்டது என்று கூறினேன். அரபி டெஸ்க்கின் நயீம் சாஹிப், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை எடுத்துக் காட்டினார்கள். அது இந்த அறிவிப்பை மறுக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றுக்குப் பிறகு வேறு எந்த விவாதமும் செய்ய வேண்டிய தேவை இல்லை. அவர்கள் இக்காலக்கட்டத்தின் இமாம் ஆவார்கள். சில அறிவிப்புகளின்படி அவர்கள் இதை எடுத்துக் கூறுகிறார்கள். நான் சில ரூஃயாக்கள் அல்லது கஷ்ஃப்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதை உண்மைப்படுத்தியுள்ளார்கள் என்பதை கேட்டிருக்கிறேன் என்கிறார்கள். எனவே, நான் எடுத்துரைத்த இந்த அறிவிப்பு, ஹதீஸ்களின் ஒரு சில நூல்களில் இடம் பெற்றுள்ளது. உண்மைச் சம்பவம் இவ்வாறு இடம் பெறவில்லை. ஹதீஸ்களின் சில நூல்கள் இதை ஏற்கவில்லை. இந்த ஹதீஸ் இடம்பெற்றுள்ள நூல்களிலும் ஐவேளை தொழுகை என்று வரவில்லை. மாறாக நான்கு தொழுகை என்றுதான் வந்துள்ளது. ஆனால் இதிலும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. அதில் அதிக நம்பகமானது, அஸர் தொழுகை மட்டும் மக்ரிப் தொழுகையுடன் தொழப்பட்டது அல்லது மிக குறுகிய நேரத்தின்படி தொழப்பட்டது என்பதாகும்.

இது தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும் சிலருக்கு ஆர்வம் இருக்கும் என்பதாலும் நான் ஒரு சில அறிவிப்பை முன் வைக்கிறேன். நான்கு தொழுகைகள் சேர்த்து தொழப்பட்டன என்ற அறிவிப்பு ஸுனன் திர்மிதியின் அறிவிப்பாகும். அந்த ஹதீஸ் இவ்வாறு வருகிறது. அதன் மொழியாக்கம் இதுவாகும்.

அபூ உபைதா பின் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் கூறுகிறார். அப்துல்லாஹ் பின் மஸ்வூத் கூறினார்கள். அஹழ் போரின் போது முஷ்ரிக்குகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நான்கு தொழுகைகளை விட்டு விலக்கி வைத்தனர். அல்லாஹ் விரும்பிய நேரம் வரை இரவு ஒரு பகுதி கழிந்தது. பின்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். அவர்கள் பாங்கு கூறினார்கள். பிறகு இகாமத் கூறப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம (ஸல) அவர்கள் ளுஹர் தொழ வைத்தார்கள். பிறகு இகாமத் கூறப்பட்டது. அஸர் தொழ வைத்தார்கள். பிறகு இகாமத் கூறப்பட்டது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்ரிப் தொழ வைத்தார்கள். பிறகு இகாமத் கூறப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இ-ா தொழ வைத்தார்கள். இது திர்மிதி கிதாபுஸ் ஸலாத் என்ற பாடத்தில் காணப்படுகிறது. பேஹ்கி -ம் இந்த அறிவிப்பை எழுதியுள்ளது. சவூதி அரேபியாவின் துஜுஸ்த் என்ற ஒரு அச்சகம் 2004ல் வெளியிட்டுள்ளது. இதிலும் இந்த அறிவிப்பு கிடைக்கிறது. ஆனால் ஸஹீஹ் புகாரி, முஸ்லிம் மற்றும் ஸுனன் அபீதாவூதில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் அறிவிப்பாக ஒரு ஹதீஸ் வருகிறது. அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அகழ் நாளின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் அவர்களின் வீடுகளையும் அவர்களின் உடைகளையும் நெருப்பினால் நிரப்புவானாக! சூரியன் மறையும் வரை அவர்கள் எம்மை நடுநேரத் தொழுகையை விட்டு தடுத்துவிட்டனர். இதிலிருந்து இந்த தொழுகை அஸர் தொழுகை என்று விளக்கமளிக்கப்படுகிறது.

இதிலிருந்து நான் கூற வந்த வி-யம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகை வீணாவதைக் கண்டு மிகவும் அதிகமாகக் கவலை அடைந்தார்கள். இதன் விளைவாக அவர்கள் எதிரிகளுக்கு ஃபத்வா செய்தார்கள். இந்த கருத்தை விளக்கும்போது இங்கு இன்னும் அதிக முக்கியத்துவம் பிறக்கிறது. ஒரு வேளைத் தொழுகையைக் கூட அவர்கள் இழக்க விரும்பியதில்லை. இதைப் பற்றி ஸஹீஹ் புகாரியில் ஒரு அறிவிப்பு வருகிறது.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அகழ் நாளன்று மாலைப் பொழுதில் வந்தார்கள். வந்து குறைஷிகளின் காஃபிர்களை ஏசினார்கள். பிறகு யா ரஸுலுல்லாஹ்! சூரியன் மறைந்து விடும் நிலையில், எனக்கு இன்னும் அஸர் தொழுகை கிடைக்கவில்லை என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவன் மீது ஆணையாக! நானும் இன்னும் தொழவில்லை என்றார்கள். பிறகு நாங்கள் புத்ஹானை நோக்கிச் சென்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்கள் உளூ செய்தார்கள். சூரியன் மறைந்த பின் அவர்கள் அஸர் தொழுதார்கள். அதன் பிறகு அவர்கள் மக்ரிப் தொழுதார்கள்.

அல்லாமா இப்னு அஜர் அஸ்கலானி அவர்கள் புகாரியின் விளக்கவுரையாகிய ஃபத்ஹுல்பாரி என்ற நூலில் கூறுகிறார்கள். இப்னு அரபி அவர்கள் இந்த கருத்தை விளக்கியவாறு இவ்வாறு கூறுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தொழ விடாமல் தடுத்து வைத்தது அஸர் தொழுகையாகும். இந்த தொழுகை மக்ரிப் நேரம் முடிந்தப்பின் தொழுதிருக்க வேண்டும் அல்லது சூரியன் மறைவதற்கான கடைசி நேரமாக இருக்க வேண்டும். (ஃபத்ஹுல்பாரி, -ராஹ் ஸஹீஹ் புகாரி.)

இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனைப் பற்றி விளக்கமாக எழுதியுள்ளார்கள். அதை வாசிக்கிறேன். ஃபதஹ் மஸீஹ் சாஹிப் என்ற ஒரு கிறித்தவ பாதிரி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பல ஆட்சேபனைகளை செய்தவாறு ஒரு அசிங்கமான கடிதத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அனுப்பினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நூருல் குர்ஆன் என்ற நூலின் இரண்டாவது பாகத்தில் இதற்கான பதிலை கொடுத்துள்ளார்கள். பல்வேறு ஆட்சேபனைகளைக் குறித்து பதில் கொடுத்துள்ளார்கள். அதில் ஒன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான்கு தொழுகைகளை ஒன்று சேர்த்து தொழுதார்கள் என்பதாகும். இதற்கு பதில் கூறும் முகமாக ஃபதஹ் மஸீஹ் என்பவரை நோக்கி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். அஹழ் தோண்டும்போது நான்கு தொழுகைகள் விடப்பட்டன என்பது ஷெய்த்தானிய தடுமாற்றமாகும். உங்களுடைய அறிவைப் பாருங்கள். இதில் **களா** என்ற சொல்லைக் கையாண்டுள்ளீர்கள். அறிவற்றவரே! தொழுகையை நிறைவேற்றுவதற்கு தான் **களா** என்று கூறுவார்கள். தொழுகையை விடுவதற்கு ஒருபோதும் **களா** என்று கூறப்படாது. ஒருவருடைய தொழுகை விடப்பட்டால் அதற்கு **ஃபவ்த்** என்று பெயர். எனவே தான் நாம் ரூ.5000/- பரிசு என்ற பிரசுரத்தை வெளியிட்டோம். அதில் **களா** என்ற சொல்லுக்குக் கூட அர்த்தம் அறியாத அறிவிலிகள் கூட இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கின்றனர் என்று எழுதினோம்.

நமது வட்டாரத்திலும் பொதுவாக இப்படித்தான் நாம் நினைத்திருக்கிறோம். அதாவது **களா** என்றால் தொழுகை விடுபட்டு விட்டது என்று நாம் புரிந்து வைத்துள்ளோம். ஆனால் கொஞ்ச நேரம் கழித்து தொழப்பட்டு விட்டது என்பதுவே அதன் அர்த்தம். ஒரு சொல்லைக் கூட அதற்குத் தகுந்த இடத்தில் பயன்படுத்த முடியாத அறிவிலியால் எவ்வாறு மிகவும் ஆழமான, நுட்பமான கருத்துகளை ஆட்சேபனை செய்ய முடியும்? அஹழ் தோண்டிக் கொண்டிருந்த வேளையில் நான்கு தொழுகைகளும் சேர்த்துத் தொழப்பட்டன என்ற இந்த முட்டாள்தனமான ஆட்சேபனைக்கு பதில் யாதெனில், அல்லாஹ் கூறுகின்றான். மார்க்கத்தில் எவ்வித பலவந்தமுமில்லை. அதாவது மனிதனையே அழித்து விடும் அளவுக்கான கடுமை இல்லை. எனவே தேவைப்படும்போதும் அவசியம் ஏற்படும்போதும் தொழுகைகளைச் சேர்த்து தொழுவதற்கும், சுருக்கி (கஸர்) தொழுவதற்கும் அனுமதியுண்டு. ஆனால் எந்த ஒரு நம்பகமான ஒரு ஹதீஸிலும் நான்கு தொழுகைகளைச் சேர்த்து தொழுவதற்கான ஆதாரம் இல்லை. மாறாக ஃபதஹ்ஹுல்பாரி, ஷரஹ் ஸஹீஹ் புகாரியில் எழுதப்பட்டிருப்பதாவது, ஒரு தொழுகை மட்டும் அதாவது அஸர் தொழுகை மிகவும் குறைந்த நேரத்தில் தொழப்பட்டது. இப்போது நீங்கள் இங்கு இருந்தால் உங்களை உட்கார வைத்து கேள்வி கேட்போம். நான்கு தொழுகைகளும் விடுபட்டு விட்டன என்பது எல்லாரும் ஏற்றுக் கொண்ட நம்பகமான அறிவிப்பா? நான்கு தொழுகைகள் தொழப்படாமல் விடப்பட்டனவா? ஷரீஅத்தின் படி நான்கு தொழுகைகளைச் சேர்த்து தொழுவதற்கான அனுமதி உண்டு. அதாவது லுஹர் & அஸர் மற்றும் மக்ரிப் & இ-ா. ஆனால் ஒரு பலவீனமான ஹதீஸ் உள்ளது. அதில் லுஹர், அஸர் மற்றும் மக்ரிப், இ-ா ஒன்றுசேர்த்து தொழுததாக

வருகிறது. ஆனால் பிற ஸஹீஹான ஹதீஸ்கள் இதை மறுக்கின்றன. அஸர் தொழுகை கடைசியான மற்றும் குறுகிய நேரத்தில் தொழப்பட்டது என்பதே நிரூபணமாகிறது.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இந்தத் தீர்ப்புக்குப் பின் நான்கு தொழுகைகள் சேர்த்துத் தொழப்பட்டன என்ற ஹதீஸ் தவறாகும். ஆனால், நான் ஏற்கனவே கூறியது போன்று அப்போதும் கூட ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு மிகவும் அதிக வேதனை இருந்தது. எனவே எதிரிகளைப் பார்த்து எமது தொழுகையை இவர்கள் வீணாக்கி விட்டனர் என்றார்கள். இதை நான் இப்போது படித்துக் காட்டியதால் நமக்கு ஒரு பலன் உண்டு. அதாவது, இந்த ஹதீஸ் நமது ஜமாஅத் நூல்களில் எங்கெல்லாம் காணப்படுகிறதோ அங்கு இதை திருத்தம் செய்து கொள்ளலாம். ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் எழுதிய ஸீரத்துந்நபி என்ற நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியுள்ளதைப் போலவே மிகவும் சரியாக எழுதியுள்ளார்கள். அதில் அவர்கள் வில்லியம் மூர் என்பவரின் கூற்றை எழுதியுள்ளார்கள். அதில் அவர் நான்கு தொழுகைகளைச் சேர்த்து தொழுததாகக் கூறுகிறார். ஆனால் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் அந்த இடத்தில் அவரது கூற்றை மறுத்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறிய தீர்ப்பின்படி, அதாவது ஹதீஸ்களிலிருந்து தெரிய வருவது என்னவென்றால் அது அஸர் தொழுகையாகும் என்பதன்படியே அதை பிறகு விளக்கியுள்ளார்கள். அந்த தொழுகை நேரம் கடந்து தொழப்பட்டது.

ஆனால், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் மே 23, 1986 -ல் நிகழ்த்திய தமது குத்பாவில் ஐந்து தொழுகைகள் ஒன்றாக சேர்த்துத் தொழுததாக குறிப்பிடுகிறார்கள். அதை முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலிலுள்ள ஹதீஸின் ஆதாரத்தின்படி கூறியுள்ளார்கள். ஆனால் தாஹிர் ஃபவுண்டேசன் மூலம் இந்த குத்பாக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் புகாரி கிதாபுல் மகாஸி என்ற ஆதாரம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு புகாரியில் கிதாபுல் மகாஸி என்ற பாடத்தின் கீழ் இந்த சம்பவம் வரவில்லை. நான் பொதுவாக அசல் ஹதீஸை பார்க்க முயற்சி செய்கிறேன். ஆனால் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் குத்பாவில் இந்த ஹதீஸின் ஆதாரத்தைப் பார்த்தேன். அதில் ஆதாரமும் இருந்த காரணத்தால் நான் அசல் ஹதீஸைப் பார்க்கவில்லை. இவ்வாறு தவறு நடந்துவிட்டது. ஆனால் இந்த தவறிலும் நன்மை ஏற்பட்டிருக்கிறது. ஒன்று, நமது நூல்களில் இந்த சம்பவம் எங்கு வந்தாலும் அது சரியாகி விடும். இரண்டாவது, இதன் மூலம் எனக்கும் கவனம் ஏற்பட்டுள்ளது. அதாவது எங்கிருந்து ஆதாரங்களைத் திரட்டினாலும் இன்னும் பரிசீலனை செய்ய முயற்சி செய்ய வேண்டும். மூன்றாவது வி-யம், நமது அமைப்பு ஏதாவது சொற்பொழிவு அல்லது குத்பாவை வெளியிடும்போது முந்தைய கலீஃபாக்களின் சொற்பொழிவாக இருந்தாலும், அசல் ஆதாரத்தைப் பார்க்க வேண்டும். மேலும் அது சம்பந்தமாக ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்கள் ஏதாவது இருந்தால் அதை கண்டிப்பாகப் பார்க்க வேண்டும். காலத்தின் கலீஃபா கூறியதை யாரும் திருத்துவதில்லை என்பது சரிதான்; ஆனால், கலீஃபாவிடம் கேட்க வேண்டும். முந்தைய கலீஃபாவின் கூற்றுகளாக இருந்தால் அந்த ஆதாரங்களின் சரியான ரிவாயத் அல்லது ஹதீஸ்களின் அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்று இருந்தால் அதன்படி அது திருத்தப்பட வேண்டும். ஆனால், அது காலத்தின் கலீஃபாவிடம் கேட்டுத்தான் திருத்த வேண்டும். எனவே தாஹிர் ஃபவுண்டே-ன் அமைப்பாளர்கள் 1986ல் உள்ள இந்த குத்பாவில் ஐவேளை தொழுகை சேர்த்து தொழுவதற்கான ஆதாரம் கொடுத்துள்ளனர். இனி வரும் பதிப்பில் இது திருத்தப்பட வேண்டும். எப்படித் திருத்தினீர்கள் என்பதை எனக்கு எழுதி அனுப்ப வேண்டும். பிறகு அது எவ்வாறு சீரமைக்கப்படும் என்று வழிகாட்டப்படும். வருங்காலத்திற்கு இதுவே நடைமுறையாக இருக்கும். எந்த ஒரு கலீஃபாவும் தமக்கு முந்தைய கலீஃபாவின் கூற்றுகளைக் கூறும் போது தவறான அறிவிப்பு வந்தால் அவர்கள் தமது விளக்கத்தின் அடிப்படையில் அதை திருத்துவார்கள்.

எந்த ஆய்வும் செய்யாமல் அதை அப்படியே வெளியிடுவது தவறான முறையாகும். ஏனெனில் வேறு சில அறிவிப்புகளும், சில சந்தேகத்திற்கிடமான ஹதீஸ் இருந்திருந்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அது தொடர்பாக தீர்ப்பு வழங்கியிருப்பார்கள். எனவே முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். எவ்வாறிருப்பினும், இந்த விளக்கத்தைக் கூறுவது அவசியம் என்று நான் கருதினேன். இதற்கு ஒரு பலன்

எல்லோருக்கும் கிடைத்து விட்டது. அவ்வாறே அறிவுப்பூர்வமான விஷயங்களையும் தெரிந்து கொண்டோம். மேலும் அமைப்புசார்ந்த சில வழிகாட்டல்களும் கிடைத்து விட்டன.

இதைத் தொடர்ந்து நான் கூற விரும்பும் விஷயம் என்னவென்றால், கடந்த நாட்களில் வஃபாத் ஆன சில சான்றோர்களை நினைவு கூறும் சிறந்த விஷயங்களாகும். முதலில் நான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மகள் சாஹிப்ஸாதி அமத்துந் நஸீர் பேகம் சாஹிபா வஃபாத்தாகி விட்டார்கள் என்பதை தெரிவிக்கிறேன். இவர் எனது சித்தியும் ஆவார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். மரணத்தின் போது இவர்களது வயது 82 ஆகும். மாஷா அல்லாஹ் கடைசி நேரம் வரை சுறுசுறுப்பாக இருந்தார்கள். மூன்று, நான்கு நாட்களுக்கு முன் இருதயத்தில் கோளாறு ஏற்பட்டது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள். டாக்டர் நூரி சாஹிப் சிகிச்சை அளித்தார்கள். ஆஞ்சோ பிளிஸ்டி ஆபரேஷன் நடந்தது குணமாகி வந்தார்கள். ஆனால் திடீரென்று மாரடைப்பு வந்தது. இது உயிரை பறிக்கும் மாரடைப்பாக இருந்தது. மருத்துவமனையில் இருக்கும்பொழுது இவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள்.

மர்ஹூமா அவர்கள் சிரித்த முகம் உடையவர்; இனிய குணமுடையவர்; பிறரை எல்லா வகையிலும் நன்கு கவனிப்பவர்களாகவும் இருந்தார். பொருளுதவியும் செய்வார்கள். அவ்வாறே உணர்வுகளை மதித்து நடப்பதும் இவரது சிறப்பியல்பாகும். அவர்களை நன்கு அறிந்தவர்களிடமிருந்து எனக்கு கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவர்களைப் பற்றி எல்லாரும் ஒரு கருத்தை தெரிவித்துள்ளார்கள். அவர்கள் சேவை மனப்பான்மை கொண்டவர்; ஆழமாக கூர்ந்து கவனிப்பவர். அல்லாஹ் எங்களது இந்த சிற்றன்னையின் பதவிகளை உயர்த்துவானாக! தனது அன்பிற்குரியவர்களிடம் அவர்களுக்கு இடமளிப்பானாக!

இவர்கள் ஏப்ரல் மாதம் 1929 ல் ஹஸ்ரத் ஸய்யிதா ஸாரா பேகம் சாஹிபாவின் வயிற்றில் பிறந்தார்கள். ஸாரா பேகம் சாஹிபா ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மூன்றாவது மனைவியாவார்கள். அமத்துல் நஸீர் சாஹிபாவின் தாயார் வஃபாத்தாகும்போது அவர்கள் மூன்றரை வயது சிறுமியாக இருந்தார்கள். குழந்தைப் பருவத்தில் இவர்களது உணர்வுகளைப் பற்றி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு படம்பிடித்துக் காட்டுகிறார்கள். இதைப் படித்து மனிதன் உணர்ச்சி பொங்காமல் இருக்கவே முடியாது. நான் எனது உணர்ச்சிகளை மிக அதிகமாக கட்டுப்படுத்துகிறேன். நான் தனிமையில் இதைப் படிக்கும் போது என் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாகி விடுகிறது எவ்வாறிருப்பினும், இவர்களின் குழந்தைப் பருவத்திலிருந்தே உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திய ஒரு சிலவற்றை எடுத்துரைப்பேன். இதில் ஒவ்வொருவருக்கும் பாடம் இருக்கிறது என்பதை நான் ஏற்கனெவே குறிப்பிட்டேன். இவரது தாயார் மரணிக்கும்போது மூன்றரை வயது சிறுமியாக இருந்தார்கள். ஆனால் இதிலும் அவர்கள் ஒரு முன்மாதிரியாக இருந்துள்ளார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எழுதிய ஒரு விளக்கமான கட்டுரையில் இதை குறிப்பிடுகிறார்கள். அதிலிருந்து ஒரு சில பகுதியை நான் எடுத்துரைப்பேன். இந்த கட்டுரையை மனிதன் படிக்கும்போது வித்தியாசமான உணர்வு ஏற்படுகிறது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்ற விதம் அந்த உணர்வை ஏற்படுத்துகிறது. இதை நான் பின்னால் எடுத்துக் கூறுவேன். அதற்கு முன்பாக இவர்களது வாழ்க்கைக் குறிப்புகளை சுருக்கமாக கூறுகிறேன். இதை எனக்கு வந்த கடிதத்தில் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

எனது தாயார் இவ்வாறு சொல்வதுண்டு. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எனது சிற்றன்னையை அவர்களின தாயாரின் வஃபாத்திற்கு பிறகு ஹஸ்ரத் உம்மே நாஸிர் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். இதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களும் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) எனது தாயாரிடம் இவர்களை கவனிக்குமாறு கூறியிருந்தார்கள். எனது தாயார் இவர்களை விட 19 வயது மூத்தவர்கள் ஆவார்கள். ஆனால் குழந்தைகளைப் போன்று பழகி வந்தார்கள். எனது தாயாரின் திருமணம் நடந்த போது எங்களது இந்த சிற்றன்னை 7,8 அல்லது 9 வயதுடையவர்களாக இருந்தார்கள். எனது தாயார் திருமணமாகி செல்லும் போது இவர்கள் அழ ஆரம்பித்தார்கள். அவர்கள் இல்லாமல் என்னால் இருக்க முடியாது. நானும் அவர்களுடன் செல்ல வேண்டும் என்றார்கள். பிறகு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், அவர்களுக்கு புரிய வைத்தார்கள்.

அதைப் புரிந்து கொண்டு பொறுமை காத்தார்கள். குழந்தைப் பருவத்திருந்தே அவர்கள் காட்டி வந்த பொறுமையையும் தன்னம்பிக்கையையும் மீண்டும் நிலைநாட்டினார்கள். மிகவும் கவலையுடன் இருந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ரப்வாவில் பிள்ளைகளுக்கு வீடு கட்டிக் கொடுத்தார்கள். அதில் எங்கள் சிற்றன்னையின் வீடும் எங்கள் தாயாரின் வீடும் அடுத்தடுத்து உள்ளது. இரண்டு வீட்டிற்கும் பொதுவான சுவர் உள்ளது. வீட்டின் பிளான் மாற்றப்படாத வரைக்கும், வீடு கட்டப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் இடையில் கதவு இருந்தது. நாங்கள் ஒருவர் மற்றவரின் வீட்டுக்குப் போய் வருவதுண்டு. நன்றாகப் பழகி வந்தோம். சிற்றன்னை எப்போதும் சிரித்த முகத்துடனும் வீட்டிற்கு வரும் அனைத்து நபர்களையும் சிறியவரையும், பெரியவரையும் வீட்டில் அழைத்து உபசரிக்கக் கண்டிருக்கிறேன். விருந்து உபச்சாரம் செய்யும் பழக்கம் இவர்களிடம் அதிகமாக இருந்தது. ஏழையாக இருந்தாலும், சிறியவராக இருந்தாலும், பெரியவராக இருந்தாலும் வீட்டிற்கு வந்தவர் யாராக இருந்தாலும் உபசரிப்பு செய்து வந்தார்கள்.

இவர்களின் கணவர் எங்களுடைய சித்தப்பா மதிப்பிற்குரிய பீர் முஹம்மது தீன் சாஹிபின் மகன் ஆவார். இவரது குடும்பத்தினர் ஜமாஅத் அல்லாதவராவார். எனது சிற்றன்னை அவர்களுடனும் மிகச்சிறந்த தொடர்பு கொண்டிருந்தார்கள். பீர் முஹம்மது சாஹிபின் சகோதரியின் மகன் கடிதம் எழுதியுள்ளார்கள். எங்களது தாய்வழி உறவினர்கள் எல்லாரும் அஹ்மதி அல்லாதவர்களாவர். இருப்பினும் மிகவும் அன்பு, நேசம் மற்றும் மரியாதை கொடுத்து வந்தார்கள். அவர்களும் இவர்களை நன்கு மதித்து வந்தனர். மிகவும் நேசத்துடன் இவர்களை நினைவு கூர்ந்து வருகின்றனர். இவர்களது இந்த அன்பு மற்றும் நேசம் இவர்களை ஜமாஅத்தின் பக்கத்தில் கொண்டு வரக் காரணமாக அமையட்டுமாக. இவர்களது துஆக்கள் இவர்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாகவும் ஆக இறைவன் நல்வாய்ப்பு வழங்குவானாக!

இவர்கள் தமது சகோதரியின் மகன், மகள்கள் மற்றும் சகோதரரின் மகன் மற்றும் மகள்களை நேசித்து வந்தார்கள். அனைவரும் இவர்களை நேசித்தார்கள். இந்த அன்பு மற்றும் நேச உணர்வின் காரணமாக அவர்களுடைய அறிவுரையை கேட்டு வந்தார்கள். அதை தவறாக எடுத்துக் கொள்வதில்லை. இவர்களது கண்டிப்பும் மிகவும் அன்பு மற்றும் சிரித்த முகத்துடனும் இருந்தது. எப்போதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் அம்மா ஜான், உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது ஆகியோரது சம்பவங்களை எடுத்துக் கூறி எச்சரிக்கையையும் அறிவுரையையும் கூறி வந்தார்கள்.

இவர்களது ஒரு சகோதரரின் மகன் ஒருமுறை என்னிடம் கூறினார். ஒரு சம்பவத்தின் போது அறியாமல் ஒரு தவறு நடந்தது. அதில் ஒரு நகைச்சுவையும் இருந்தது. பெரியவர் யாரையாவது இதில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆர்வமாக இருந்தார்கள். ஆனால் சுற்றிப் பார்த்த பிறகு திட்டு விழும் என்று எண்ணி எதுவும் கூறவில்லை. இறுதியில் இருவரும் இவர்களிடம் வந்தார்கள். இவர்கள் மிகவும் பொறுமையுடன் அவர்கள் கூறுவதைக் கேட்டார்கள். சிரிப்பும் வந்தது. அத்துடன் இந்த சூழ்நிலையில் இஸ்லாமிய போதனை இதுவாகும் என்று கூறி அறிவுரை வழங்கினார்கள். எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும், இஸ்லாமிய போதனை மற்றும் அஹ்மதிய்யத்தின் மரபுகளை பேணி வந்தார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் புரிய வைக்க முயற்சி செய்வார்கள். அவர்களின் எல்லா விஷயங்களும் இஸ்லாமிய மரபுகளைச் சுற்றியே இருந்தது. குடும்பத்தின் பெண்களுக்கு அறிவுரை வழங்கி வந்தார்கள். ஜமாஅத்திற்கு என்று ஒரு கண்ணியம் உள்ளது. அந்த புனிதத் தன்மையை காக்க வேண்டும் என்பார்கள். முன்னதாக நான் அவர்களுடைய வீட்டிற்கு சென்ற போதெல்லாம் பெரியவர்களை மதிப்பதைப் போல் மதிப்பார்கள். கிலாஃபத்திற்குப் பிறகு முன்பிருந்த அன்பும் நேசமும் இன்னும் அதிகமாகி விட்டது. அதில் மதிப்பும் மரியாதையும் இணைந்து கொண்டது. தொடர்ந்து துஆ செய்வதற்காக கடிதமும் எழுதி வந்தார்கள். கிலாஃபத்துடன் அசாதாரண முறையில் விசுவாசம் கொண்டிருந்தார்கள். இரண்டு முறை ஜல்ஸாவிற்காக இங்கு வந்திருந்தார்கள். மிகவும் கண்ணியம் மற்றும் கிலாஃபத்துடன் மதிப்பும் கொண்டிருந்தார்கள். ஓர் அஹ்மதியிடம் காணப்பட வேண்டிய நற்பண்புகள் யாவும் இவர்களிடம் மிகுதியாகவே காணப்பட்டன. சில நேரம் அவர்கள் காட்டும் நடைமுறையால் வெட்கம் ஏற்படும். வரும்போதெல்லாம் ஒவ்வொரு வருடமும் வர வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஆனால் என்ன செய்வது? வயது முதிர்ந்து விட்டது. எனவே

யோசிக்கின்றேன் என்பார்கள். சில நேரம் இங்கு வர ஏற்பாடுகள் செய்ய திட்டமிட்டும் அது நடக்காமல் போய் விடுகிறது.

நான் ஏற்கனவே கூறியதைப் போன்று இவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் உம்முல் மூஃமினீன் உடன் மிக நீண்ட காலம் இருந்திருக்கிறார்கள். எனது தாயாருக்கு திருமணமானவுடன் அவர்கள் மிக நீண்ட காலமாக ஹஸ்ரத் அம்மா ஜானுடன் வாழ்ந்து வந்தார்கள். எனவே ஹஸ்ரத் அம்மா ஜானுடைய பல அறிவிப்புகளும் பல சம்பவங்களும் இவர்களுக்கு ஞாபகம் இருந்தது. இங்கே ஒருமுறை அவர்கள் ஜல்ஸாவிற்காக வந்த போது U.K. சதர் சாஹிபா லஜ்னா இமாயில்லாஹ்வின் ஏற்பாட்டின் அடிப்படையில் சில பதிவுகளை செய்து கொடுத்துள்ளார்கள். ஹஸ்ரத் அம்மா ஜானுடைய சம்பவங்கள் இதுவரை வெளியிடப்படாதவைகளை லஜ்னா அமைப்பு வெளியிட வேண்டும். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒருமுறை தமது இரண்டு மனைவிகளுக்கும் டியூட்டி கொடுத்து அம்மா ஜானின் உடல்நிலை மோசமான போது இரவு இருவரும் மாறி மாறி சென்று கவனித்துக் கொள்ள வேண்டும் என்றார்கள். பிறகு அம்மா ஜான் இப்போது எனக்கு உடல் நலமாகி விட்டது. எனவே இனி யாரையும் எனக்காக அனுப்ப வேண்டிய தேவை இல்லை என்று கூறினார்கள். ஹஸ்ரத் அம்மா ஜானும் அவர்களை அதிகமாக நேசித்து வந்தார்கள். அவர்களுக்கு திருமணமான உடன் ஹஸ்ரத் அம்மா ஜான் மிகவும் கவலையடைந்தார்கள். கொஞ்ச நாள் கழித்து அவர்கள் அம்மா ஜானை சந்திக்க வந்த போது, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை கையைப் பிடித்தது அழைத்து ஹஸ்ரத் அம்மா ஜானிடம் சென்று இதோ உங்கள் மகள் உன்னை சந்திக்க வந்திருக்கிறான் என்றார்கள். எனவே ஹஸ்ரத் அம்மா ஜான் மிகவும் அதிகமாக நேசம் கொண்டிருந்தார்கள்.

கிலாஃபத்துடன் அவர்கள் கொண்டிருந்த உறவு பற்றி கூறிக் கொண்டிருந்தேன். இது தொடர்பாக நான் மேலும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இதில் அவர்கள் எவ்வளவு முன்னேறி இருந்தார் என்றால் அவர்கள் எந்தவொரு நெருங்கிய உறவையும் பொருட்படுத்தவே மாட்டார்கள். இதன் காரணமாக அவர்களுக்கு சில கஷ்டங்களையும் சகித்துக் கொள்ள நேர்ந்தது. ஆனால் எப்போதும் கிலாஃபத்திற்காக அவர்கள் ஒரு கேடயம் போல் நின்றிருந்தார்கள். அவர்களின் வீட்டில் வளர்ந்த ஒரு நபர் இப்போது அவர் பெரிய வயதை அடைந்து விட்டார். அவர் எழுதுகிறார்: மதிப்பிற்குரிய பீபீயான் அவர்களின் மரணத்தால் எங்கள் உள்ளத்திற்கு மிகுந்த துக்கம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் ஒரு மிக நேர்மையான மற்றும் துஆ செய்து வந்த ஒரு சிறந்த நபரை இழந்து விட்டோம். மேலும் தொடர்ந்து அவர் எழுதுகிறார்: பீபி மிகவும் நேர்மையானவர். நல்லவர்; துஆ செய்ய வருபவர். ஏழை எளியவர்களுக்கு உதவுகின்ற மற்றும் இறையச்சம் கொண்ட ஒரு சிறந்த பெண்மணி ஆவார். எப்போதும் கிலாஃபத்துடன் நாங்கள் ஒன்றியிருக்க எங்களுக்கு அறிவுரை வழங்கி வந்தார்கள். காலத்தின் கலீஃபாவின் கட்டளையை செயல்படுத்த சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருப்பார்கள். பிறகு தமது வட்டாரத்தில் லஜ்னாவின் பணிகளை செய்து வந்தார்கள். லஜ்னாவின் பத்திரிகையாகிய மிஸ்பாஹ் –ன் சந்தாவை வசூலிக்க லஜ்னா உறுப்பினர்களை அனுப்பி வந்தார்கள். யாராவது சந்தாவை தாமதமாக கொடுப்பவர்கள் அல்லாது சந்தா வராமல் இருந்தால் இவர்கள் தமது கையிலிருந்து சந்தாவை செலுத்தி விடுவார்கள். சந்தாவை கட்டுவதில் தாமதம் ஏற்பட்டு விடக்கூடாது என்பார்கள்.

இன்னும் அவர் தொடர்ந்து எழுதுகிறார். பஜாரிலிருந்து பொருள் வாங்கி வருமாறு அவ்வப்போது என்னை அனுப்புவார்கள். அப்போது பணம் குறைந்தால் நான் எனது கையிலுள்ள காசைப் போட்டு வாங்கி வருவேன். அதற்கு அவர்கள் நான் யாருக்குக் கடன் பட்டிருக்க விரும்பவில்லை. எனவே என்னிடம் உடனடியாக பைசா வாங்கிக் கொள் என்பார்கள்.

மும்தாஸ் என்பவர் இவ்வாறு எனக்கு கடிதம் எழுதியுள்ளார். ஒரு சில மாதம் அதிகமான திருமண அழைப்பிதழ்கள் வந்தால் இந்த எல்லா இதழ்களின் பட்டிலையும் தயார் செய் என்று கூறுவார்கள். பின்பு வீட்டில் முன்பு வேலை செய்த முந்தைய பணிப்பெண்கள் அல்லது முந்தைய பெரியவர்களிடம் வேலை செய்த பணிப்பெண்களின் வீட்டிற்கு கண்டிப்பாக செல்வார்கள். அல்லது ஏழை பெண்ணின் திருமணம் இருக்கிறது. எனக்கு கண்டிப்பாக நினைவுபடுத்து என்று சொல்வார்கள். சில சமயம் ஒரு நாளைக்கு மூன்று முறை சொல்வார்கள். நான் இந்த ஏழைப் பெண்ணின் திருமணத்திற்கு கண்டிப்பாக போக வேண்டும். நீயும் தயாராக இரு என்று கூறுவார்கள்.

செய்யது (தாவூது) அஹ்மது என்ற இவர்களது மருமகன் எழுதுகிறார். எனது சிற்றன்னை முஹல்லாவின் சதர் லஜ்னாவாக இருந்தார்கள். அந்த சமயத்தில் அவர்கள் கிலாஃபத்திற்குக் கட்டுப்பட வேண்டும் என்ற உணர்வை அவர்கள் ஏற்படுத்தினார்கள். இது அசாத்தியமான ஒரு பணியாகும். இதற்காக எந்தவொரு ஆதாரமும் தேவையில்லை. மாறாக இது அவர்களது இயல்பின் ஓர் அங்கமாகும். அவர்கள் வஃபாத் ஆன அன்று காலையிலிருந்தே ஹுஸூரிடம் எனக்காக துஆ செய்யுமாறு கூறுங்கள் என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். அவர்கள் தமக்கு வஃபாத் நேரம் வந்து விட்டது என்பதை அறிந்திருந்தார்கள் என்று தெரிகிறது. ஏனென்றால் அவர்கள் தமது ஒரு பேத்தியிடம் வஃபாத் ஆன தமது ஓர் அண்ணி வந்துள்ளார்கள் என்று கூறியிருக்கிறார்கள். மகள்களை அழைத்து அன்பு செய்து என்னை மன்னித்து விடுங்கள் என்று கூறினார்கள். அவர்களிடம் பல நல்ல சிறப்பம்சங்கள் இருந்தன. தாய் என்ற முறையிலும், மாமியார் என்ற முறையிலும் அவ்வாறே ஒரு மனைவி என்ற முறையிலும் அவர்களின் முன்மாதிரி மிகவும் உயர்ந்ததாக இருந்தது. இவர்களின் கணவருடைய இயல்புக்கு தகுந்தவாறு எப்போதும் அவர்களை நன்றாக கவனித்து வந்தார்கள். ஒருபோதும் எந்தவொரு புகாரும் சொல்வதற்கு சந்தர்ப்பம் அளித்ததில்லை.

நமது சான்றோர்களின் உதாரணத்தை நான் எடுத்துக் கூறும் காரணம் என்னவென்றால், புதிதாக மணமான தம்பதிகள் மத்தியில் பிரச்சனைகள் உருவாகின்றன. எனவே அவர்கள் இதை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக பெண்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். பெண்களுக்குரிய முதல் கடமை அவர்கள் தமது வீட்டை கவனிக்க வேண்டும்.

பிறகு எழுதுகிறார்கள்: அவர்கள் தமது கணவருக்கு முழுமையாக கட்டுப்பட்டிருந்தார்கள். மகள்களுக்கும் அவர்களது கணவர்களை நன்றாக கவனிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்கள். கணவனிடம் வாக்குவாதம் செய்து பார்த்ததில்லை. அறிவுரை கூறும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை), ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) மற்றும் ஹஸ்ரத் அம்மா ஜான் ஆகியவர்களின் உதாரணம் கண்டிப்பாக கொடுப்பார்கள். கோபம் வந்தாலும் அது கொஞ்ச நேரம் தான் நீடிக்கும். மீண்டும் சகஜமான முறையில் பரிவு காட்டுவார்கள். குடும்பத்திலுள்ள இதர பெண்களுக்கு எப்போதும் அறிவுரை கூறி வந்தார்கள்.

இதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நம்மைப் பார்த்து பிறருக்கு ஒருபோதும் ஏமாற்றம் ஏற்பட்டு விடக்கூடாது. அவர்களது இந்த துஆக்கள் இவர்களுக்கும், குடும்பத்தின் பிற பெண்களுக்கும் எப்போதும் பயன்தரக் கூடியதாக அல்லாஹ் ஆக்குவானாக.

பணியாளர்களுடனும் இவர்கள் மிகவும் பரிவுடன் நடந்து கொள்வார்கள். வீட்டிலேயே வளர்ந்து வந்த பெண் குழந்தைகளுக்கு அவர்கள் சிறிய வயதில் இருந்த போதே திருமணத்திற்கான நகைகளை சேகரிக்க ஆரம்பித்தார்கள். திருமணத்திற்கான செலவுகளையும் கொடுத்து வந்தார்கள். சில நேரம் வேலை செய்கின்ற பெண்ணும் அவளது மகள்களும் மிகவும் மரியாதைக் குறைவுடன் நடந்து கொண்டனர். அவர்களை பணியை விட்டு நீக்கி விட வேண்டும் என்று ஆலோசனை வழங்கும் போது நான் இன்றும் இந்த பெண்களுக்கு திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டியுள்ளதே என்று கூறுவார்கள். திருமணத்திற்குப் பின்பு அவர்களின் சுக துக்கங்களில் கலந்து கொண்டார்கள்.

அவர்களுடைய இந்த நடைமுறை உறவுகளை மேம்படுத்துவதற்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். அவர்கள் கூறுவார்கள். மருமகளுக்கு ஏதாவது புரிய வைக்க வேண்டும் என்றால் மகனுக்கு அறிவுரை வழங்க வேண்டும். மருமகனுக்கு ஏதாவது புரிய வைக்க வேண்டும் என்றால் மகளுக்கு அறிவுரை வழங்க வேண்டும் என்பார்கள். கருணை காட்டும் போது அவர்களுக்கே கூட அது தெரியாதவாறு செய்வார்கள். இறைவணக்கங்கள் மற்றும் சந்தா செலுத்துவது ஆகியவற்றில் அசாத்தியமான முறையில் முன்னேறி இருந்தார்கள். இதற்காக சில கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தாலும் பரவாயில்லை. இந்த கடமைகளை விட்டு ஒருபோதும் விலாகதீர்கள்.

1944-ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சொத்துக்களை ஜமாஅத்திற்கு வக்ஃப் செய்யும் திட்டத்தை அறிவித்த போது அவர்கள் தமது நகைகளை எடுத்து வைத்தார்கள். 13 வயதில் இவர்கள் காதியானின் தாருல் மஸீஹ் வளாகத்தை பாதுகாக்கும் பணியில் பொறுப்பு அமர்த்தப்பட்டார்கள். காதியானின்

நாஸிராத் செயலராகவும் பணியாற்றினார்கள். ஹிஜ்ரத்திற்குப் பிறகு ரத்தன்பாக் – ரப்வாவில் தொண்டாற்றினார்கள். எல்லா விதமான தொண்டாற்றுவதற்கும் இவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் ஒருபோதும் அவர்களுக்கு பதவியின் மீது மோகம் வந்ததில்லை. பொறுப்பு வகித்த போதிலும் அவர்களிடம் சிறிய பணிகள் செய்யுமாறு கூறினாலும் அதற்காக உடனே தயாராகி விடுவார்கள். கல்வித் திறன் மற்றும் நிர்வாகத் திறன் மற்றும் மார்க்க அறிவு ஆகியவற்றில் மிகவும் திறமைவாய்ந்தவர்களாகத் திகழ்ந்தார்கள்.

அவர்கள் ஒரு இன்டர்வியூவில் கூறினார்கள்: தாம் லாஹூரில் ரத்தன்பாக் என்ற இடத்தில் ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிபின் மனைவி ஹஸ்ரத் ஸாலிஹா பேகம் சாஹிபாவுடன் இரவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வந்தனர். இரவில் போர்த்துவதற்கு துணி இல்லாதவர்களுக்கு கம்பளி கொடுத்து வந்தார்கள். 1949-ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அம்மா ஜான் அவர்களின் வண்டியில் ரப்வா வருவதற்கான பாக்கியம் கிடைத்தது. இது எனது வாழ்க்கையின் மறக்க முடியாத தருணமாகும் என்று கூறிவந்தார்கள். ரப்வாவின் மஸ்ஜித் முபாரக்கின் அடிக்கல் நாட்டு விழாவில் ஒரு செங்களில் துஆ செய்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண் என்ற பாக்கியமும் இவர்களைச் சார்ந்ததாகும். ரப்வா தொடக்கத்தில் குடியேறிய போது உறுதியாக சுவர்கள் இல்லாத வீடுகள் இருந்தன. அங்கும் லஜ்னாவில் தொண்டாற்றுவதற்கு இவர்களுக்கு நல்வாய்ப்பு கிடைத்தது. பிறகு ஹல்கா தாருல் குர்ஷீத் ஷிமாலியில் மிக நீண்ட காலம் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. 1973 முதல் 1982 வரை ரப்வாவின் நாயிப் சதர் லஜ்னாவாக இருந்தார்கள். எனது தாயார் ரப்வாவின் சதர் லஜ்னாவாக இருந்தபோது இவர்களுக்கு அங்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. 1982க்குப் பிறகு ஒரு சில ஆண்டுகள் லஜ்னாவின் கித்மத்தே கல்க் செயலராகவும் இருந்தார்கள். விருந்தினர் செயலராகவும் இருந்துள்ளார்கள். அதேபோன்று ஊரின் பல்வேறு பொறுப்புகளிலிருந்து பணியாற்றியுள்ளார்கள். ஒவ்வொரு முறை இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பையும் மிகவும் பணிவுடன் செய்து வந்தார்கள்.

இவர்களது ஒரு மகள் எழுதுகின்றார்கள்: உம்மி உடல்நலமில்லாமல் இருந்த போது சந்திப்பதற்காக யாராவது வந்து சந்திக்காமல் திரும்பி இருந்தால் அவர்களுக்கு மிகவும் அதிகமாக கவலை இருந்தது. சந்திப்பதற்கு யார் வந்தாலும் அவர்களை தடுக்க வேண்டாம் என்று அவர்கள் எங்களுக்கு மீண்டும் மீண்டும் கூறி வந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (அலை) அவர்களது வாசல் எப்போதும் பிறரை சந்திக்கத் தயாராக இருந்தது. யார் வேண்டுமானாலும் வரலாம் என்று திறந்திருந்த போது நான் எவ்வாறு மறுக்க முடியும்? என்பார்கள்.

அவர்களின் ஒரு மகள் எழுதுகின்றார்கள்: உம்மிக்கு அவர்களின் எல்லா சகோதர சகேதரிகளுடனும் அன்பும், நேசமும் இருந்தது. அவர்களின் சகோதர சகோதரிகளைப் பார்த்து யாரும் கேலிக்குக் கூட இது உங்களது சொந்த சகோதர சகோதரிகளா? இல்லை உங்கள் தந்தையின் வேறு மனைவிக்குப் பிறந்த சகோதரர்களா? என்று கேட்டாலும் அவர்களுக்கு பிடிக்காது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு பல மனைவிகள் இருந்தனர். அவர்கள் மூலம் பல பிள்ளைகளும் இருந்தனர். இருந்தாலும் அங்கு இதைப் பற்றி பேசப்படுவதில்லை. யாராவது அப்படி கேட்டால் உடன்பிறந்தவர்களா? இல்லையா? என்ற பேச்சே எழக்கூடாது. ஏனென்றால் இது தந்யொருக்கும் பிடிக்காது. அதாவது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு அறவே பிடிக்காது என்று கூறுவார்கள்.

அவர் எழுதுகிறார்: ஒரு அஹ்மதியல்லாத சாசா கூறினார். பாயி எப்போதும் மிகவும் கண்ணியத்துடன் இருக்கிறார்கள் என்று கூறினார். பிறகு எங்களது தாயாரைப் பற்றி கூறும் போது சிற்றன்னையுடன் அதிக நேசம் கொண்டிருந்தார்கள். பாஜி ஜான் குறிப்பிடுவார்கள். எங்கள் தந்தையார் என்னை பாஜி ஜானிடம் ஒப்படைத்து விட்டார்கள். அதை பாஜி ஜான் காப்பாற்றினார்கள். அவர்களின் சின்ன சகோதர சகோதரிகள் எங்கள் தாயாரை பாஜி ஜான் என்று அழைப்பார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் தமது ஒரு கணவை குறிப்பிடுகிறார்கள். இது மிக நீண்ட கணவாகும். ஹஸ்ரத் ஸய்யிதா சாரா பேகம் சாஹிப் வந்துள்ளார்கள். அப்போது வேறு சில விஷயங்களைத் தவிர அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் நீங்கள் என்னிடம் கோபம்

அடைந்திருக்கிறீர்கள் என்று கூறுகிறார்கள். அப்போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நான் கனவில் பதில் சென்னேன். சாஹிப் ஸாதி அமத்துந்நஸீர் சாஹிபாவை வீட்டில் பாசத்தோடு சீரோ என்று அழைப்பார்கள். நீ எனக்கு சீரோ போன்ற மகளை தந்திருக்கிறாய். நான் எப்படி கோபமடைவேன்? என்கிறார்கள்.

அவர்கள் எப்போதுமே இதை மிகவும் அதிகமாக பேணி வந்தார்கள். அதாவது அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மகள் ஆவார்கள். எனவே அவர்களின் காரணமாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மீது எந்த பாதிப்பும் வந்து விடக் கூடாது என்று கவனமாக இருந்து வந்தார்கள். ஓர் சம்பவத்தை அவர்கள் பல கூட்டங்களில் சொல்லி இருக்கிறார்கள்.

ஒருமுறை அவர்கள் தமது சகோதரரின் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார்கள். அது ரோட்டின் மறுபுறம் இருந்தது. சகோதரரின் வீடு எதிர் திசையில் தான் இருக்கிறது என்று புர்காவின் கீழ் பாகத்தை மட்டும் தலையில் அணிந்து கொண்டு, முழுமையான புர்காவை அணியாமல் முகத்தை மூடாமல் தலையில் முக்காடை எடுத்து விட்டு புர்காவின் கோர்ட்டை மட்டும் தலையில் போட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியில் வந்து ரோட்டின் மத்தியில் செல்லும் போது ஹஸ்ரத் மவ்லூது (ரலி) அவர்கள் அதே ரோட்டில் வந்து கொண்டிருந்தார்கள். இது அந்தக் காலத்தில் நடந்த சம்பவமாகும். கிலாஃபத்தின அலுவலகத்திலிருந்து வெளியே அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். என்னிடம் வேறு வழியே இல்லை. எனவே நான் அப்படியே திரும்பி என் வீட்டிற்கு வந்து விட்டேன். ஹுஸூர் என்னை கவனித்திருக்க மாட்டார்கள் என்று எண்ணினேன். அடுத்த நாள் காலை உணவின்போது ஹுஸூர் அவர்களைச் சந்திக்க சென்ற போது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நீ ஒரு அடி முன்னால் எடுத்து வைத்தால் மக்கள் 10 அடி முன்னால் எடுத்து வைப்பார்கள் என்று கூறினார்கள். இவ்வாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் பர்தாவைப் பேணுமாறு தர்பிய்யத் வழங்கினார்கள். இவர்களின் பிள்ளைகளிலும், இவர்களது குடும்பத்தின் பிள்ளைகளிலும் மேலும் ஜமாஅத்தின் பெண்களிடமும் பர்தாவின் சிந்தனை எப்போதும் இருக்குமாறு ஆக்குவானாக!

நான் முன்னதாக குறிப்பிட்ட ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் எழுதிய கட்டுரையில் அவர்கள் கூறுகின்றார்கள்:

3 அல்லது மூன்றரை வயது பெண் குழந்தை தாய் தந்தையுடன் எப்போதும் வாழ்ந்து வந்த காரணத்தால் அது மிகவும் அதிகமாக துக்கத்துடன் இருந்தது. அவனது சகோதரன் அவளுக்கு எடுத்துரைத்ததும் வியப்படைந்தவாறு அவள் அமைதியாகி விட்டாள். மரணம் என்றால் என்னவென்று அவளுக்கு தெரியாது. பிறரிடம் கேட்டுத்தான் புரிந்து கொள்ளக் கூடியவளாக இருந்தாள். அவளுடைய சகோதரன் அவளுக்கு என்ன சொன்னான் என்று தெரியாது. அவள் அழவும் இல்லை. கதறவுமில்லை. சத்தமிடவும் இல்லை. சாரா பேகமின் உடல் கட்டிலில் வைக்கப்பட்டவுடன், ஜமாஅத்தின் பெண்கள் அங்கு ஒன்றுகூடி இருந்தனர். அப்போது சாஹிப் ஸாதி அமத்துந் நஸீர் என் அம்மா தூங்குகிறார் என்று கூறினார்கள். என் அம்மா தூங்கி எழுந்தவுடன் நீங்கள் தூங்கும் போது இந்த பெண்கள் உங்களுடைய தலைமாட்டில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார்கள் என்று சொல்வேன் என்றார்கள். பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள். அவர்களது தாயார் வஃபாத் ஆனபோது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது அவர்கள் பயணம் சென்றிருந்தார்கள். அவர்கள் பயணத்தை முடித்து விட்டு திரும்பிய போது அவர்கள் அடக்கம் செய்யப்பட்டு முடிந்து விட்டது. திரும்பி வந்ததும் அமத்துந் நஸீரை கொஞ்சினேன். அவளுடைய கண்கள் ஈரமாக இருந்தன. ஆனால் அவள் அழவில்லை. மரணம் என்றால் என்னவென்று இவளுக்குத் தெரியாது என்று நான் உறுதி கொண்டேன். ஆனால் இது எனது தவறாகும் என்று நான் தெரிந்து கொண்டேன். இந்த பெண் குழந்தை எனக்கு இன்னொரு பாடத்தைக் கற்பித்துக் கொண்டிருந்தது. சாரா பேகம் தாருல் அன்வாரின் புதிய கட்டிடத்தில் வைத்து மரணமடைந்தார். நாங்கள் எங்களுடைய சொந்த வீடாகிய தாருல் மஸீஹிற்கு திரும்ப வந்ததும் அவளுடைய கால்களில் பூட்ஸ் இல்லை. ஒரு நபரை அனுப்பி பூட்ஸ் வாங்கி வரச் சொல்லப்பட்டது. அவளுக்கு அந்த பூட்ஸ் காட்டப்பட்டது. உனக்கு விருப்பமான பூட்ஸை நீ எடுத்துக் கொள் என்று நான் அவளிடம் கூறினேன். அவள் கவனிக்காமல் ஒன்றிரண்டு அடி நடந்தாள். பின்னர்

திடீரென்று நின்றாள். மிகவும் வியப்புடன் ஒருமுறை என்னை பார்த்தாள். மறுமுறை அவளது மூத்த அம்மாவை பார்த்தாள். அதாவது ஹஸ்ரத் உம்மே நாஸிர் சாஹிபாவை பார்த்தாள். அந்த பார்வையின் பொருள், நீ உனக்கு பிடித்த பூட்ஸை நீ எடுத்துக் கொள் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் எனது தாய் வஃபாத் ஆகி விட்டார்கள். இனி எனக்கு யார் பூட்ஸ் வாங்கித் தருவார்?

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது எழுதுகின்றார்கள்: அந்த நேரத்தில் எனது உணர்ச்சியை கட்டுப்படுத்திக் கொண்டு நான் அங்கே நின்றிருந்தால் எனது கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து விடும் என்று நினைத்ததும் நான் உடனேயே எனது முகத்தை திருப்பி விட்டேன். பிறகு பூட்ஸை உனது அம்மா ஜானிடம் கொண்டு செல் என்று கூறி நான் அங்கிருந்து சென்று விட்டேன்.

எமது வீட்டில் குழந்தைகள் தமது தாயை உம்மி என்றும் எனது பெரிய மனைவி உம்மே நாஸிரை உம்மி ஜான் என்று அழைப்பார்கள். நான் இவ்வாறு கூறி, போகும் போது திரும்பிப் பார்த்தேன். அமத்துந் நஸீர் தனது உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொண்டாள். அவள் மிகவும் பொறுமையுடன் பூட்ஸை கையில் எடுத்துக் கொண்டு அவள் உம்மி ஜானிடம் சென்று கொண்டிருந்தாள். பிற்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் அவள் சிறிய குழந்தையாக இருந்த போதிலும் நன்றாக புரிந்து கொள்கிறாள் என்பதை நிரூபித்து விட்டாள்.

பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் இவர்களுக்காக துஆ செய்தவாறு எழுதுகின்றார்கள்:

அல்லாஹ் இந்த சின்னஞ்சிறு மொட்டு வாடாமல் பாதுகாப்பானாக. அவன் இந்த சின்னஞ்சிறு மனதை தனது கருணையின் தண்ணீரைக் கொண்டு தாகம் தீர்ப்பானாக. நல்ல சிந்தனைகள், நல்லெண்ணங்கள் மற்றும் நல்ல உணர்வுகள் ஆகியவற்றின் வயலாக உருவாக்குவானாக. ஒரு உலகத்திற்கே உயிரூட்டி உலகிற்கு அருளாக இருக்க வகை செய்வானாக. கருணை காட்டுபவர்களுக்கெல்லாம் கருணை காட்டுபவனே! நீ உள்ளங்களை அறியக் கூடியவனாவாய். இந்த குழந்தை தனது உணர்வுகளை அவ்வாறு அடக்கிக் கொள்கிறாள் என்று உனக்குத் தெரியும். உனது பண்புகளைப் பற்றிய அறிவு அக்குழந்தைக்கு உள்ளதா? இல்லையா? என்று தெரியாது. ஆனால் உனது கட்டளையின்படி எங்களை விட அதிக தைரியத்துடன் செயல்படுகிறது. இவள் வெளிப்படையான பொறுமையை மேற்கொண்டதைப் போன்று நீ இவளது உள்ளத்தை விபத்துகளின் புயல் தாக்குவதிலிருந்து பாதுகாப்பாயாக. இவள் ஒரு மிகப்பெரும் சக்தியை கண்டிருக்கிறாள். அதே போன்று அவள் உள்ளத்தை பொறுமையைக் கொண்டு நிரப்புவானாக. நீ அவளுக்கு உண்மையான சக்தியையும் வழங்குவாயாக. யா ரப்! உனது ஹிக்மத் இப்போது அவளை அவனது தாயாரின் அன்பை விட்டு விலக்கி விட்டது. அன்பு மற்றும் நேசத்தின் ஊற்று நீ அவளை உனது அன்பின் மடியில் ஏந்திக் கொள்வாயாக. உனது அன்பின் விதையை அவளது உள்ளத்தில் விதைப்பாயாக. ஆம்! ஆம்! நீ அவளை உனக்காக அர்ப்பணித்துக் கொள்வாயாக. அவளை உனது தொண்டிற்காக தேர்வு செய்வாயாக. உனது வாசலில் நிற்கும் பிச்சைக்காரி, உனது வாசலில் காத்திருக்கும் யாசகி இவளுக்கு நீ உலகத்தின் அருட்கொடையையும் வழங்குவாயாக. இதனால் அவள் மக்களின் பார்வையில் இழிவடையாமல் இருக்க வேண்டும். எல்லாவித மரியாதையும் கிடைத்தும் ஒரு மனிதர் மழை பெய்யும் போது ஒரு அறையிலிருந்து இன்னொரு அறைக்கு ஓடி விடுவதைப் போன்ற தொடர்பு மட்டுமே உலகத்துடன் இருக்க வேண்டும்.

இறைவனின் அருளால் அவர்களது முழு வாழ்நாளிலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் இந்த துஆக்கள் முழுமையடைந்ததை நாம் பார்க்கிறோம். இவர்களின் சந்ததிகளும் இந்த துஆவை உண்மைப்படுத்துபவர்களாக ஆகட்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குடும்பத்தார் அனைவரும் மற்றும் ஜமாஅத்தின் எல்லா உறுப்பினர்களும் இந்த துஆவை உண்மைப் -படுத்துபவர்களாக ஆக்குவானாக. பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது எல்லா பிள்ளைகளுக்காகவும் துஆ செய்துள்ளார்கள். அதை எடுத்துக் கூறுவது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன். இப்போது நான் அதை வாசிக்கிறேன். முழு ஜமாஅத்தையும் இதற்கு உண்மையாக பொருந்தக் கூடியதாக ஆக்குவானாக. நாம் இன்ஷா அல்லாஹ் வெற்றியுடன் அடுத்த காலகட்டத்திற்குள் நுழைய விரும்புகிறோம். நமது நிலை இவ்வாறு இருந்தால் தான் நாம் வெற்றி பெற முடியும்.

அந்த துஆ இதுவாகும். என் இறைவா! எனது மீதி பிள்ளைகளையும் உன்னிடம் ஒப்படைக்கிறேன். இவர்கள் உலகத்தின் நாய்களாக இல்லாமல் உனது சொர்க்கத்தின் பறவைகளாக இருப்பார்களாக. அவர்கள் மார்க்கத்தின் தூண்களாக இருப்பார்கள். பைத்துல்லாஹ்வை பாதுகாப்பவர்களாக இருளில் வழிதவறியவர்களுக்கு வழிகாட்டும் வானத்தின் நட்சத்திரங்களாக இருப்பார்களாக. இருளை கிழித்து கடின உழைப்பு, முன்னேற்றம் மற்றும் முயற்சி ஆகியவற்றிற்காக வழியைத் திறந்து விடும் பிரகாசமான சூரியனாக ஆக்குவாயாக. மேலும் அது தூங்குபவர்களை விழிப்பூட்டும் பிரிவுண்டவர்களை இணைக்கும். இவர்கள் அன்பின் மரங்களாக இருப்பார்களாக. இந்த மரத்தின் கனி காழ்ப்புணர்ச்சி மற்றும் பொறாமையின் கசப்பிலிருந்து முற்றிலும் தூய்மையாக இருக்கட்டுமாக. இவர்கள் வழியிலுள்ள கிணற்றைப் போன்றவர்களாக இருக்க வேண்டும். அது நிழல் தரும் மரங்களை சூழ்ந்துள்ளதாகும். அதில் களைப்படைந்த பயணி, அறிந்தவர் அறியாதவர் இளைப்பாற தங்குகிறார். அதன் குளிர்ந்த நீர் தாகமாக இருக்கும். எல்லாருடைய தாகத்தையும் தணிக்கிறது. ஆதரவற்ற ஒவ்வொருவருக்கும் அடைக்கலம் தருகிறது. இப்படிப்பட்டவர்களாக அவர்களை ஆக்குவாயாக. கொடுமையிழைப்பவரை கொடுமையிலிருந்து தடுப்பவர்களாகவும், கொடுமைக்கு ஆளானவர்களுக்கு நண்பர்களாகவும் தாம் மரணத்தை ஏற்றுக் கொண்டு உலகத்தை உயிர்ப்பிக்கக் கூடியவர்களாகவும், தாம் கஷ்டத்தை பொறுத்துக் கொண்டு பிறருக்கு அமைதியை வழங்குபவர்களாக இருப்பார்களாக. அவர்கள் தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும் உயர்ந்த நல்லொழுக்கம் கொண்டவர்களாகவும் இருப்பார்களாக. இவர்களது உணவு விரிப்பு யாருக்கும் தடையாகாமல் இருக்க வேண்டும். அவர்கள் நன்மையில் முன்னேறுபவர்களாக இருக்க வேண்டும். இவர்களது கை கட்டப்பட்டு இல்லாமலும் வெட்கத்தால் தலைகுனிவு ஏற்படும் வகையில் மிகவும் விரியாமலும் இருக்க வேண்டும். நேர்வழிகாட்டும் என் இறைவா! அவர்கள் மார்க்கத்தில் முபல்லிக்குகளாகவும், இஸ்லாத்தைப் பரப்புபவர்களாகவும் உயிரற்ற ஒழுக்கங்களுக்கு உயிரூட்டுபவர்களாகவும் அழிந்துபோன இறையச்சத்தின் வழியை மீண்டும் ஒளியூட்டுபவர்களாகவும், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீரர்களாக லம்மா யல்ஹகூபிஹிம் என்பதை உண்மைப்படுத்தக்கூடியவர்களாகவும் பாரசீக வம்சத்தின் நடைமுறைகளை வைத்திருப்பவர்களாகவும் உனக்காக ரோஷம் கொண்டவர்களாகவும் உனது மார்க்கத்திற்காக நெஞ்சை நிமிர்ந்து நிற்கும் வீரர்களாகவும் உனது ரஸூல்மார்களின் விசுவாசம் கொண்டவர்கள் என்பதன் உண்மையான வாரிசாகவும் எனது இறைவா உண்மை நேசத்தின் தீ ஒருபோதும் அணையாததாகவும் இருக்க வேண்டும். என் இறைவா அவர்கள் உனது அடியார்களாக இருப்பார்களாக. ஆம் உனக்கு மட்டுமே அடிமையாக இருப்பார்களாக. உலக அரசர்களின் முன்னால் அவர்களின் தலை குனியாமல் இருக்க வேண்டும். ஆனால் உன் சந்நிதானத்தில் அவர்கள் மிக அதிகமாக பணிவை மேற்கொள்பவர்களாக இருக்க வேண்டும். தூய சந்ததிகளை விட்டுச் செல்பவர்களாகவும் ஞானத்தின் வழியில் நடத்துபவர்களாகவும் என்றும் அழியாத நன்மையின் ஒரு விதையை விதைப்பார்களாக. நல்லவர்களை இன்னும் உயர்த்துபவர்களாகட்டும். தீயவர்களை சீர்திருத்துபவர்களாகவும் உயிரற்ற உள்ளத்தை வெறுக்கக் கூடியவர்களாகவும் ஆன்மீக வாழ்க்கையின் உயிரோட்டமுள்ள முன்மாதிரிகளாக ஆக்குவாயாக. ஹய்யுல் கய்யூம் ஆகிய இறைவனே அவர்களும் அவர்களின் சந்ததிகளும் உலகில் உன்னுடைய அமானத்தாக இருப்பார்களாக. அதை ஷய்த்தானால் அபகரிக்க முடியாமல் இருக்க வேண்டும். அவர்கள் யாராலும் திருட முடியாத உனது செல்வங்களாக இருப்பார்களாக. அவர்கள் மார்க்கத்தின் கட்டிடத்தின் ஒரு மூலைக் கல்லாக இருக்க வேண்டும். அதனால் எவராலும் புறக்கணிக்கப்பட முடியாதவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் எல்லா தீமையையும் வேரோடு வெட்டி எரியும் உன்னுடைய கையில் உள்ள வாளாக இருக்க வேண்டும். பாவம் செய்தவர்களை மன்னிப்பதற்காக நீளுகின்ற உனது சகித்துக் கொள்ளும் கரங்களாகும். அவர்கள் புயல் முடிந்து விட்டதற்கான நற்செய்தியை வழங்கும் ஷய்த்தானின் கிளைகளாக இருப்பார்களாக. ஹய்யுல் கய்யூம் ஆகிய இறைவா நீ உனது மக்களை ஒன்று திரட்டுவதற்காக ஊதுகின்ற எக்காளமாக அவர்கள் இருப்பார்களாக. ஆக மொத்தத்தில் அவர்கள் உன்னுடையவர்களாகவும் நீ அவர்களுடையவனாகவும் இருப்பாயாக. அவர்கள் உனது ஏகத்துவத்தைப் பார்த்து தங்களையும் அறியாது இவ்வாறு முழங்குவார்களாக.

ஆமீன் ஸும்ம ஆமீன். பிரஹ்மதிக்க அஸ்தஃகீஸ் யா ரப்புல் ஆலமீன்.

இந்த துஆ ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரின் மீதும் பூர்த்தியாகட்டுமாக. அல்லாஹ் மர்ஹூமின் பதவிகளை உயர்த்திக் கொண்டே செல்வானாக. இவர்களின் சந்ததிகளுக்கு இவர்கள் செய்த நல்லறிவுரையின்படி செயல்பட நல்வாய்ப்பு வழங்குவானாக.

இரண்டாவது, நமது ஜமாஅத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் மதிப்பிற்குரிய மவ்லானா அப்துல் வஹ்ஹாப் அஹ்மது சாஹிப் ஷாஹித் முரப்பியே ஸில்ஸிலா. தந்தையார் பெயர் மர்ஹூம் மவ்லானா அப்துர் ரஹ்மான் சாஹிப். அப்துல் வஹ்ஹாப் சாஹிப் 11.09.11 லிருந்து ஒன்றரை மாதங்களில் உடல்நிலை சரியில்லாமல் ஆகி வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அப்துல் வஹ்ஹாப் சாஹிப் 5.9.1943 -ல் ஆஸாத் காஷ்மீரின் கோட்லி மாவட்டமான கோயி என்ற ஊரில் பிறந்தார்கள். அங்கேயே கல்வி கற்றார்கள். 1967-ல் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மூலம் ஷாஹித் பட்டம் படித்து முடித்தார்கள். பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் தொண்டாற்றினார்கள். இதன் பிறகு 1991 முதல் 1999 வரை நஸாரத் தஃவத்தே இலல்லாஹ்வின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் தஃவத்தே இலல்லாஹ்வின் முக்கிய பணிகளை மேற்கொண்டுள்ளார்கள். தன்ஸானியாவில் 1976 மார்ச் முதல் 1979 அக்டோபர் வரை தொண்டு செய்வதற்கான நல்வாய்ப்பு பெற்றார்கள். தன்ஸானியாவில் ஜூலை 1981 முதல் 1986 வரை அமீர் மற்றும் முபல்லிக் இன்சார்ஜ் என்ற பணியில் தொண்டு செய்வதற்கான பாக்கியம் பெற்றார்கள். 1999 முதல் 2006 டிசம்பர் வரை தாருஸ் ஸியாஃபாத் - ரப்வாவின் முரப்பியாக பணியாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள். அதன் பிறகு இஸ்லாஹ்-வ-இர்ஷாதின் மேலிடத்து அலுவலகத்தில் தொண்டு செய்து வந்தார்கள்.

இவர் மிகவும் சிரித்த முகத்துடனும், சந்தோஷமான மனப்பான்மை உடையவராவார். கிலாஃபத்துடன் அன்பு கொண்டவரும், நேசம் உடையவரும் ஆவார். விருந்தோம்பல் செய்பவரும், ஏழைகளின் மீது பரிவு காட்டுபவரும் ஆவார். எல்லாருக்கும் பிடித்த நல்ல மனிதராவார். கல்வியில் ஆர்வமுடையவராவார். அல் ஃபஸ்ல் மற்றும் இதர பத்திரிகைகளில் கட்டுரை எழுதி வந்தார். இவர் ஒரு நல்ல எழுத்தாளராவார். இவருடைய குடும்பத்தின் மூத்தவர்கள் மற்றும் மூதாதையரில் ஒருவர் டில்லியின் ஒரு முக்கியஸ்தராவார். இவர் இந்தியாவில் இஸ்லாத்தை பரப்பியவராவார். இவர்களின் சந்ததியிலிருந்து ஹஸ்ரத் மவ்லானா மஹ்பூப் ஆலம் சாஹிப் பிறந்தார். அவர் டில்லியிலிருந்து குஜராத்திற்கு ஹிஜ்ரத் செய்து சக்மியானா டேலுவில் வசித்து வந்தார். இங்கிருந்து கல்வி கற்பதற்கு காஷ்மீர் சென்றார். இவர் கோயீ என்ற இடத்தில் இருக்கும் போது இவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகை பற்றிய செய்தி கிடைத்தது. இக்காலகட்டம் இறைவன் புறமிருந்து ஒரு சீர்திருத்தவாதி வரும் காலமாகும் என்று இவர் கூறி வந்தார். மஹ்தி வந்திருக்க வேண்டும் என்று இவர் எதிர்பார்த்திருந்தார். இதே சிந்தனையில் அவர் ஆழ்ந்திருந்தபோது ஒருமுறை ரூஃயாவில் மஸீஹ் மற்றும் மஹ்தியின் தோற்றம் நிகழ்ந்து விட்டது என்று கண்டார். பிறகு ஆராய்ச்சி செய்வதற்காக பயணம் மேற்கொண்டார். தமது ஆசிரியர் ஹஸ்ரத் மவ்லானா புர்ஹானுத்தீன் ஜஹ்லமியை சந்தித்தார். பின்பு தமது ரூஃயாவை எடுத்துக் கூறினார். அதற்கு நாம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டோம். நீங்களும் அடையாளங்களை வைத்து ஆய்வு செய்து பாருங்கள் என்று அவர் கூறினார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் லாஹூரில் இருந்தார்கள். உடனே அவர் லாஹூர் சென்றார். அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கையில் நேரடியாக பைஅத் செய்தார்கள். பைஅத் செய்து திரும்பியதும் எதிர்ப்பு ஏற்பட்டது. நல்ல உள்ளம் கொண்டவர்கள் இவர் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார்கள்.

மூன்றாவது மரணமடைந்தவரது நினைவு கூறல். மதிப்பிற்குரிய அப்துல் காதிர் ஃபயாஸ் சாஹிப். சாண்டியோவின் முரப்பி ஆவார். மாஸ்டர் குலாம் முஹம்மது சாஹிப் சாண்டியோவின் மகன் அப்துல் காதிர் ஃபயாஸ் சாஹிப். இவர் செப்டம்பர் 8 ஆம் தேதி வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் பிள்ளைகளை பள்ளியில் விடுவதற்காக சென்று கொண்டிருந்த போது வழியில் மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். ஆனால் அல்லாஹ்வின் நியதி வென்றது. மரணமடைந்தார்கள். மே மாதம் ஒன்றாம் தேதி 1974-ல் இவர் ஷாஹித் பட்டம் பெற்று பணியாற்றத் தொடங்கினார்கள். பாகிஸ்தானில் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் உள்ளூர் மற்றும் மேலிடத்தின் வக்ஃபே ஜதீதின்

கீழ் 14 இடங்களில் மார்க்கத் தொண்டாற்றும் பாக்கியம் பெற்றார். 2 முறை தன்ஸானியாவில் பணியாற்றும் பாக்கியம் பெற்றார். இவர் மார்டினா பார்க்கரில் நாயிப் நாஸிர் வக்ஃபே ஜதீதாகவும் பணிபுரிந்தார். இன்றைய நாட்களில் இவர் கராச்சியில் பணி அமர்த்தப்பட்டிருந்தார். இவர் மிகவும் மகிழ்ச்சியான மனப்பான்மை கொண்டவராவார். நல்ல இயல்பு கொண்டவரும், சிரித்த முகமுடையவரும் நல்லொழுக்கம் உடையவரும் ஆவார். எந்த ஜமாஅத்திற்கு சென்றாலும் எல்லாரையும் நேசம் கொண்டவர்களாக ஆக்கி விடுவார். விருந்தோம்பல் செய்பவர், ஏழைகளிடம் பரிவு கொண்டவராவார். எல்லாருடனும் நன்கு பழகி வாழ்ந்து வந்தார். இவருடைய சிறப்பு பண்பு என்னவெனில் இவர் மிகவும் பொறுமையுடையவரும், நன்றியுடையவரும் ஆவார். பொறுத்துக் கொள்ளும் மனப்பான்மை அதிகம் கொண்டவராவார். யாராவது துன்புறுத்தினாலும் அவருடனும் எப்போதும் நல்லவிதமாகவே நடந்து வந்தார். ஒருபோதும் பழிவாங்கியதில்லை. கிலாஃபத்தே அஹ்மதிய்யாவுடன் அர்ப்பணிப்பு உடைய அன்பும் நேசமும் கொண்டவராவார். காலத்தின் கலீஃபாவுடன் எல்லா கட்டளைகளுக்கும் தான் கட்டுப்படுபவராக இருந்தார். முழுமையாக கட்டுப்பட்டு வந்தார். ஜமாஅத்துகளையும் முழுமையாக கட்டுப்பட வைக்க முயற்சி செய்து வந்தார். மர்ஹூமுடைய நட்புறவு வட்டம் மிகவும் பரந்ததாகும்.தமது வட்டாரத்தில் மிகவும் விரும்பப்படுகின்ற ஒரு நபராவார். அவர் தொண்டு செய்த எல்லா ஜமாஅத்துகளும் இன்னும் அவரை நல்ல விதமாகவே நினைவு கூறுகின்றன. சிந்து மாகாணத்தின் பிரபலமான சாண்டியோ கோத்திரத்தின் முதல் வக்ஃபே ஸிந்தகி ஆவார். சிந்தைச் சேர்ந்த முரப்பிகளில் மூன்றாவது வக்ஃபே ஸிந்தகி ஆவார். மர்ஹூமின் பதவிகளை அல்லாஹ் உயர்த்துவானாக.

மூன்றாவது மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது கான் சாஹிப். தந்தையார் பெயர் மதிப்பிற்குரிய அப்துல் கரீம் கான் சாஹிப். நவம்பர் 7-ல் தனது 76வது வயதில் மரணமடைந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் மவ்லவி ஹகீம் அன்வர் ஹுஸைன் கான் சாஹிபின் தந்தைவழிப் பேரனும், ஹஸ்ரத் அப்துர் ரஹீம் நய்யர் சாஹிபின் தாய்வழிப் பேரனும் ஆவார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தனிச்செயலரான மதிப்பிற்குரிய யஹ்ய கான் சாஹிப் (ரலி) அவர்களின் சகோதரரின மகன் ஆவார். இவர் மிகவும் அறிவாளியாகவும் திறமையான பொறியாளராகவும் இருந்தார். ஜல்ஸா ஸாலானாவில் தொண்டு செய்து வந்தார். ரப்வாவில் முதன்முதலாக ரொட்டி தயாரிக்கு ம் இயந்திரத்தை நிறுவிய போது அந்த நேரத்தில் சிறந்த தொண்டாற்றும் நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. இவர் இலண்டன் ஜல்ஸாவின் மொழிபெயர்ப்பு மற்றும் கம்யூனிகேஷன் பணியிலும் தொண்டாற்றி வந்தார். இவர் நூஹ் (அலை) அவர்களின் கப்பலைப் பற்றி ஆய்வு நடத்தினார். திருக்குர்ஆன் மற்றும் பழங்கால நூல்களின் ஒளியில் ஒரு நூல் எழுதுவதற்கு நல்வாய்ப்பு பெற்றார். அது இன்னும் வெளியிடப்பட முடியவில்லை. இவர்களின் ஆய்வை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தர்ஸுல் குரஆன் மற்றும் கேள்வி பதில் சபைகளில் எடுத்துக் கூறியுள்ளார்கள். மிகவும் தூய்மையான மனிதர். மிகவும் விசுவாசமுடையவர். பிறருக்கு திறந்த மனப்பான்மையுடன் உதவி செய்து வந்த நல்ல மனிதராவார். இவர் மூஸி ஆவார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் மாமாவின் மகள் இவரது மனைவியாவார்கள். ஹஸ்ரத் ஸய்யது அப்துர் ரஸ்ஸாக் ஷாஹ் சாஹிபின் மருமகன் ஆவார். அல்லாஹ் இவரது பதவிகளை உயர்த்துவானாக. இவர்களை மன்னிப்பானாக. நான் இங்கு எடுத்துரைத்த அனைத்து மர்ஹூம்களுக்காகவும் தொழுகைக்குப்பின் ஜனாஸா காயிப் தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 18.11.2011**

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456